## மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

### பதவி வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை அலுவலகத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) <u>நிருவாக அலுவலர் வகுப்பு II - JM 1-1(வெற்றிடம் 01)</u>**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்** (கீழுள்ள பந்தி 1 அல்லது 2)

1. நிருவாகம் மற்றும் மனித வளங்கள் முகாமை துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஒரு பட்டம்.

2. நிருவாகம் மற்றும் மனித வளங்கள் முகாமை விடயத் துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை பட்டய நிறுனத்தின் இடைக்காலப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்** (கீழுள்ள பந்தி 1 அல்லது 2)

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக மேலே உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வேண்டப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

2. பதவியுடன் தொடர்புடைய துறையில் 'முகாமை உதவியாளர் - தொழிநுட்பவியல் சாராதது' (MA 1-2) வகுப்பு II இல் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

சம்பள அளவுத்திட்டம்: JM 1-1 - ரூ.72,650/= 10x1360 – 18x2040 - ரூ.122,970/-

ஆரம்ப அடிப்படைச் சம்பளம் - ரூ. 65,633/=(2026)

(மேலே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (DMS) சுற்றறிக்கை இல. 1/2025 இற்கு ஏற்ப தரப்பட்டுள்ளது என்பதோடு இந்த அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சம்பளப்படி 2027.01.01ஆம திகதியிலிருந்து செயற்படுத்தப்படும். சொல்லப்பட்ட அடிப்படைச் சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்).

**(2) முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III - MA 1-2 (வெற்றிடங்கள் 03)**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

கல்வி:

(அ) க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில்

i. சிங்களம்/தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவி தொடர்பிலான விசேட ஏனைய அவசியமான தகைமைகள்

I. மேலே "அ" முதல் "ஆ" வரை குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய விடயத்துறையில் அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

II. கணனி பயன்படுத்துதல் தொடர்பிலான அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப மட்டம் - திறன் சாராத மற்றும் திறன் சார் தரத்தில் கீழே "ஆ", "இ" மற்றும் "ஈ" பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில்

i. சிங்களம்/தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணனி சொல் செயன்முறைப்படுத்தல் (Word processing)/தட்டச்சு செய்தல் தொடர்பில் மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்கை நெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது ஏனைய அதற்கு சமமான மட்டத்தில் திறன் பெற்றிருத்தல் உரிய சந்தர்ப்பங்களில் தகைமையொன்றாகக் கருதப்படும்).

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு உடன் முன்னராக, நிரந்தர நியமனத்தின் கீழ் பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ந்து திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

சம்பள அளவுத்திட்டம்: MA 1-2 - ரூ.46,220/= 10x540 – 7x630 – 12x1, 080 – 12x1, 280 – 84,350/=

ஆரம்ப அடிப்படைச் சம்பளம் - ரூ. 43,312/=(2026)

(மேலே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (DMS) சுற்றறிக்கை இல. 1/2025 இற்கு ஏற்ப தரப்பட்டுள்ளது என்பதோடு இந்த அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சம்பளப்படி 2027.01.01ஆம திகதியிலிருந்து செயற்படுத்தப்படும். சொல்லப்பட்ட அடிப்படைச் சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

பொது நிபந்தனைகள்

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இந்தப் பதவி நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாகும். இடமாற்றம் இல்லை.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும்படி வேண்டப்படலாம்.

(ஈ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி மருத்துவ மற்றும் விபத்துக் காப்புறுதி திட்டத்துக்கு உரித்துடையவராவார்.

(ஊ) **சான்றிதழ்கள்:** மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (அவ்வாறு சான்றிதழ்களின்

பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

முழுமையான சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தில் உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள், முகவரிகள், தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட்டு கீழே குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு 2026.01.21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் முலையில் குறிப்பிடவும்.

பிரதம நிறைவேற்று அதிகாரி/மார்ஷல்,

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

த.பெ.இல:223,

கொழும்பு 12.